# மெட்ரோ நிலையத்துடன் சுரங்க பாதை இணைப்பு

**சென்னை, பிப். 15–** அரசினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையத்துடன், வாலாஜா சாலை, அரசு பல்நோக்கு மருத்துவமனை சுரங்க பாதைகள் இணைக்கப்படுகின்றன.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் பாதையில், அரசினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையத்தின் தெற்கு பக்கமும், மேற்கு பக்கமும், அண்ணா சாலையில், இரண்டு சுரங்கப் பாதைகள் உள்ளன.

அண்ணா சாலை – வாலாஜா சாலை சந்திக்கும் இடத்தில், மூன்று வழிகளுடன் கூடிய சுரங்கப்பாதை உள்ளது.

அரசு பல்நோக்கு மருத்துவமனை அருகில், அண்ணா சாலையில் ஒரு சுரங்கப்பாதை உள்ளது. இந்த பாதைகள், மெட்ரோ ரயில் நிலையத்துடன் இணைக்கப்படுவதற்காக, புதுப்பிக்கும் பணி நடந்து வருகிறது.

இப்பணி முடிந்து, மார்ச் மாதம், மெட்ரோ நிலையத்துடன் இணைக்க, ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.